பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
08 03 2025 6 30
சனிக்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மகளிரின் வாழ்வாதாரத்தை உயர்த்தி அவர்களை அதிகாரம் மிக்கவர்களாக உருவாக்குவதற்கான முயற்சியில் மத்திய அரசு அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. தேசிய பாதுகாப்புப் பணியில் மகளிருக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

3. சர்வதேச மகளிர் தினத்தையொட்டி தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் மகளிர் சுய உதவிக் குழு பெண்களுக்கு மாநில அரசு சார்பில் கடனுதவி வழங்கப்பட்டது.

4. மலையாள மொழியில் இருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட ‘எனது ஆண்கள்’ என்ற நூலுக்காக எழுத்தாளர் விமலாவுக்கு சாகித்ய அகாடமி விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

5. ஆசிய மகளிர் கபடி சாம்பியன் போட்டியில் இந்தியா பட்டம் வென்றது.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<>>>>

மகளிரின் வாழ்வாதாரத்தை உயர்த்தி அவர்களை அதிகாரம் மிக்கவர்களாக உருவாக்குவதற்கான முயற்சியில் மத்திய அரசு அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலம் நவ்சாரியில் சர்வதேச மகளிர் தினத்தையொட்டி நடைபெற்ற மகளிரை லட்சாதிபதியாக்கும் சம்மேளன நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அவர், பெண்கள் தலைமையிலான வளர்ச்சியை நோக்கி இந்தியா முன்னேறி வருவதாக கூறினார்.

மகளிரின் நலனுக்காக மட்டுமல்லாமல் அவர்களின் கண்ணியத்தையும், அதிகாரத்தையும் உறுதி செய்ய வேண்டும் என்பதில் தமது அரசு முனைப்போடு செயல்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

மகளிருக்கு அடிப்படை சுகாதார வசதிகள் உறுதி செய்யப்பட வேண்டும் என்பதற்காக நாடு முழுவதும் ஆயிரக்கணக்கான பாதுகாக்கப்பட்ட கழிப்பறைகளை அரசு அமைத்து தந்திருப்பதாகவும் அவர் கூறினார்.

நாட்டின் அனைத்து துறைகளிலும் பெண்களின் பங்கு அதிகரித்து வருவதாக கூறிய அவர், இந்திய மகளிரின் வலிமையை ஒட்டுமொத்த உலகமுமே தற்போது உணர்ந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

மகளிர் சுயஉதவிக் குழுக்கள் நாட்டின் வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றி வருவதாகத் தெரிவித்த பிரதமர், அடுத்த 5 ஆண்டுகளில் 3 கோடி லட்சாதிபதி பெண்களை உருவாக்க வேண்டும் என்ற இலக்குடன் தமது அரசு செயல்பட்டு வருவதாகக் கூறினார்.

நவ்சாரியில் நடைபெற்ற லட்சாதிபதி பெண்கள் சம்மேளன நிகழ்ச்சியை ஒட்டி பயனாளிகளிடம் பிரதமர் கலந்துரையாடினார்.

வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, சிறுதொழில்கள் போன்றவற்றில் பெண் உறுப்பினர்கள் வருவாய் ஈட்டும் நோக்கில் அவர்களுக்கான நிதியுதவியுடன் பயிற்சியும் அளிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் கூறினார்.

குஜராத் மாநிலத்தில் மட்டும் ஒரு லட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்களின் ஆண்டு வருமானம் ஒரு லட்சம் ரூபாயைக் கடந்து லட்சாதிபதி பெண்கள் என்ற பட்டத்தை அவர்கள் பெற்றிருப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த பெண்களுக்கு 450 கோடி ரூபாய் கடனுதவியையும் அவர் வழங்கினார்.

<<<<>>>>

தேசிய பாதுகாப்புப் பணியில் மகளிருக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

கோயம்புத்தூரில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இன்று மகளிர் தினம் கொண்டாடப்படுவதை ஒட்டி, பிரமரின் பாதுகாப்புப் பணியில் முழுமையாக மகளிர் ஈடுபட்டுள்ளதையும் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் பாதுகாப்புப் பணியில் மகளிருக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாகவும், சைனிக் பள்ளிகளில் அதிகளவில் பெண் குழந்தைகள் சேர்க்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

பிரதமரின் அனைவருக்கும் வீடு திட்டத்தின்கீழ் பெண்கள் பெயரில் வீட்டு மனைகள் வழங்கப்படுவதாகவும், இலவச எரிவாயு இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் திரு. எல். முருகன் தெரிவித்தார்.

<<<<>>>>

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி மாநில அரசு சார்பில் அனைத்து மாவட்டங்களிலும் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு கடனுதவி வழங்கும் விழா இன்று நடைபெற்றது.

கோவை, விருதுநகர், மதுரை உள்ளிட்ட மாவட்டங்களில் மாநில அமைச்சர்கள் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு கடனுதவியை வழங்கினர்.

<<<<>>>>

தமிழகத்தில் கோடை காலத்தில் மின் தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக மாநில மின்துறை அமைச்சர் திரு. செந்தில் பாலாஜி தெரிவித்துள்ளார்.

கோவையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மின் வினியோகத்தை சீராக பராமரிப்பதற்கான ஆய்வுக் கூட்டம் தமது தலைமையில் நடைபெற்றதாகவும், தடையற்ற மின் வினியோகத்தை உறுதி செய்ய வேண்டும் என அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

<<<<>>>>

2024ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாடமி மொழிபெயர்ப்புக்கான விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

21 பேருக்கு இந்த விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளதாக சாகித்ய அகாடமியின் செயற்குழு தெரிவித்துள்ளது.

மலையாள மொழியில் இருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட ‘எனது ஆண்கள்’ என்ற நூலுக்காக நெல்லையில் பேராசிரியராக பணியாற்றும் எழுத்தாளர் விமலாவுக்கு சாகித்ய அகாடமி விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

விருது பெறும் ஒவ்வொருவருக்கும் 50 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசும், தாமிரப் பத்திரமும் அளிக்கப்படும் என்று அதன் செயலர் திரு. ஸ்ரீனிவாசராவ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் வரும் திங்கட்கிழமை முதல் இரண்டு நாட்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

*மாவட்டச் செய்திகள்*

தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் நடைபெற்ற சமூக வளைகாப்பு நிகழ்ச்சியில் மாநில அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் கலந்துகொண்டு பயனாளிகளுக்கு வாழ்த்து தெரிவித்தார்.

<<<<>>>>

நாமக்கல் மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 55 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை மாநில அமைச்சர் திரு. மதிவேந்தன் வழங்கினார்.

<<<<>>>>

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மகளிர் சுயஉதவிக் குழு கண்காட்சி இன்று நடைபெற்றது.

<<<<>>>>

நாகை மாவட்டத்தில் தனியார் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பல்வேறு விழிப்புணர்வு போட்டிகள் நடத்தப்பட்டு மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

<<<<>>>>

கள்ளக்குறிச்சியில் மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திரு. பிரசாந்த் இன்று வழங்கினார்.

<<<<>>>>

திருவள்ளூர் மாவட்டம் ஆவடியில் மகளிர் தினத்தையொட்டி மாரத்தான் போட்டியை காவல் ஆணையர் திரு. சங்கர் தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மகளிர் தினத்தையொட்டி அனைத்து துறை பெண் அலுவலர்களுக்கு கோலப் போட்டி நடைபெற்றது.

<<<<>>>>

பெரம்பலூர் மாவட்டத்தில் மகளிரின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

<<<<>>>>

சேலத்தில் மகளிருக்கான உதவி எண் 1 8 1—ஐ பிரபலப்படுத்தும் வகையில் விழிப்புணர்வு நடைபயணம் நடைபெற்றது.

<<<<>>>>

மயிலாடுதுறையில் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு மாரத்தான் போட்டி நடைபெற்றது.

<<<<>>>>

அரியலூரில் நடைபெற்ற வேகநடைபோட்டியில் ஏராளமான பெண்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர்.

<<<<>>>>

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மகளிர் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் நடைபெற்ற மாரத்தான் போட்டியை ஆட்சியர் திரு. தினேஷ்குமார் தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

திருச்செந்தூர் சுப்ரமணிய சுவாமி திருக்கோவிலில் மாசி திருவிழாவை முன்னிட்டு ஏராளமான பக்தர்கள் காவடி எடுத்து நேர்த்திக்கடன் செலுத்தினர்.

-லட்சுமணன்

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய மகளிர் கபடி சாம்பியன் போட்டியில் இந்தியா பட்டம் வென்றது.

ஈரானின் டெஹ்ரானில் இன்று நடைபெற்ற இப்போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்தியா 32-25 என்ற புள்ளிக் கணக்கில் ஈரானை வென்றது.

இதுவரை நடைபெற்ற 6 சாம்பியன் போட்டிகளில் இந்தியா 5 முறை பட்டம் வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

<<<<>>>>

மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் பெங்களூரு அணி – உத்தரப்பிரதேச அணியை எதிர்கொள்கிறது.

லக்னோவில் இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

**<<<<The End>>>>**